


07. 08. 2025

தலைப்பு செய்திகள்

- விவசாயிகளின் நலன்களில் எவ்வித சமரசத்திற்கும் இடம் அளிக்கப்பட மாட்டாது என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி உறுதிபட தெரிவித்தார்.
- குடியரசு துணை தலைவர் தேர்தலுக்கான அறிவிக்கையை தேர்தல் ஆணையம் இன்று வெளியிட்டது.
- பொலிவுறு நகர இயக்கத்தின் கீழ் 95 சதவிகித பணிகள் முடிவடைந்துள்ளதாக மத்திய நகர்புற விவகாரங்களுக்கான அமைச்சர் திரு.மனோகர் லால் மக்களவையில் கூறினார்.
- இலங்கை சிறையில் உள்ள 80 தமிழக மீனவர்களையும் 237 மீன்பிடி படகுகளையும் உடனடியாக விடுவிக்கும் நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள, முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வலியுறுத்தினார்.
- ஜெட்டாவில் நடைபெறும் ஆசிய கோப்பை கூடைபந்து போட்டியில் இந்தியா தற்போது சீனாவை எதிர்கொண்டுள்ளது.

இனி விரிவான செய்திகள்

*********

பிரதமர் - எம்.எஸ். சாமிநாதன்

விவசாயிகள், மீனவர்கள், பால் உற்பத்தியாளர்கள் நலன்களில் எவ்வித சமரசத்திற்கும் மத்திய அரசு இடம் அளிக்காது என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி உறுதிபட தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் பேராசிரியர் எம்.எஸ்.சுவாமிநாதனின் சர்வதேச நூற்றாண்டு மாநாட்டில் இன்று உரையாற்றிய பிரதமர் விவசாயிகளின் நலனே மத்திய அரசின் உயர் முன்னுரிமை என்றார்.

வேளாண் பெருமக்களின் வருவாயை அதிகரித்து பண்ணை விவசாய செலவுகளை குறைக்க அரசு தொடர்ந்து செயலாற்றி வருவதாக கூறினார்.

தேசத்தின் முன்னேற்றத்திற்கான அடித்தளம் விவசாயிகளின் வலிமையே என்று பிரதமர் எடுத்துரைத்தார்.

பால், பருப்பு, சணல் உற்பத்திகளில் உலகின் முதன்மையான நாடாக இந்தியா திகழ்கிறது என்று கூறிய அவர் சென்ற ஆண்டு அதிக அளவு உணவு தானிய உற்பத்தி சாதனையை இந்தியா படைத்ததாக எடுத்துரைத்தார்.

உணவு உற்பத்தியில் நம் நாடு தன்னிறைவை எட்ட எம்.எஸ் சுவாமிநாதன் அர்ப்பணிப்புடன் செயலாற்றியதாக கூறிய அவர் பல்லுயிர் பெருக்கத்தையும் தாண்டி தொலைநோக்கு பார்வையுடன் உயிரி முன்னெடுப்புகளை அவர் சிறப்புடன் மேற்கொண்டதாக பாராட்டினார்.

உணவு பாதுகாப்பை உறுதி செய்வதே நம் நாட்டின் விவசாயிகளின் அடுத்த தலையாய பணி என்று கூறிய அவர், பருவநிலை மாற்றங்களை எதிர்கொள்ளும் வகையிலான பயிர் வகைகளை உருவாக்க வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துரைத்தார்.

வேளாண் புரட்சிக்கு வித்திட்ட எம்.எஸ். சுவாமிநாதனை, பாரத் ரத்னா விருதுடன் கவுரவிக்க மத்திய அரசுக்கு கிடைத்த வாய்ப்பு குறித்து பெருமிதம்

தெரிவித்த பிரதமர் கடந்த 10 ஆண்டுகளில் கைத்தறி துறை தனித்துவத்துடன் வலுவாக முன்னேற்றம் கண்டு வருவதாக மகிழ்ச்சி தெரிவித்தார்.

இந்நிகழ்வில் எம்.எஸ்.சாமிநாதனின் நினைவு அஞ்சல் தலையையும், நாணயத்தையும் பிரதமர் வெளியிட்டார்.

*********

எம்.எஸ். சுவாமிநாதனின் - முதலமைச்சர் - முருகன்

பருவ நிலை மாற்றம் உள்ளிட்ட தற்போதைய உலகளாவிய சவால்களை பல பத்தாண்டுகளுக்கு முன்னதாகவே கணித்து எச்சரித்த தொலைநோக்காளர் எம்.எஸ்.சுவாமிநாதன் என்று முதலமைச்சர் புகழாரம் சூட்டியுள்ளார்.

விவசாய நலனிற்கான தொடர் ஆராய்ச்சிகளுக்கு பெரும் பங்களிப்பை வழங்கி, தேசத்தின் உணவு தேவைகளை பூர்த்தி செய்வதற்கான வழிமுறைகளை கண்டறிந்தவர் எம்.எஸ்.சுவாமிநாதன் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் பாராட்டியுள்ளார்.

*********

குடியரசு துணை தலைவர் தேர்தல்

குடியரசு துணை தலைவர் தேர்தல் அடுத்த மாதம் 9ஆம் தேதி நடைபெறுவதற்கான அறிவிக்கையை தேர்தல் ஆணையம் இன்று வெளியிட்டதை அடுத்து வேட்பு மனு தாக்கல் இன்று தொடங்குகிறது.

மனுக்களை தாக்கல் செய்ய வரும் 21ஆம் தேதிவரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

தேவை ஏற்பட்டால் அடுத்த மாதம் 9ஆம் தேதி தேர்தல் நடைபெறும்.

திரு.ஜக்தீப் தன்கர் குடியரசு துணை தலைவர் பதவியை சென்ற மாதம் ராஜினாமா செய்ததை அடுத்து இந்த தேர்தல் நடைபெறுகிறது.

நாட்டில் நடைபெறும் 17ஆவது குடியரசு துணை தலைவர் தேர்தலாகும் இது.

*********

நாடாளுமன்றம்

பீஹார் வாக்காளர் பட்டியல் விவகாரம் உள்ளிட்ட பல பிரச்சனைகளில் எதிர்கட்சிகள் இன்றும் அமளியில் ஈடுபட்டதால் நாடாளுமன்ற இரு அவைகளும் இன்று பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டன.

மக்களவை இன்று காலை கூடியதும் கேள்வி நேரத்தை அவைத்தலைவர் திரு.ஓம்.பிர்லா நடத்த முற்பட்டபோது பீஹார் விவகாரத்தில் விவாதம் நடத்தப்பட வேண்டும் என்று கோரி எதிர்கட்சியினர் முழக்கமிட்டதால் நிலவிய கூச்சல் குழப்பங்களை அடுத்து அவை முதலில் நண்பகல் வரை ஒத்திவைக்கப்பட்டது.

இந்த அமளியின் ஊடே மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்புற விவகாரங்களுக்கான அமைச்சர் திரு.மனோகர் லால், பொலிவுறு நகரங்கள் தொடர்பான கேள்விக்கு மக்களவையில் பதில் அளித்தார்.

மீண்டும் அவை கூடியபோது மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் மணிப்பூர் சரக்கு சேவை வரி திருத்த மசோதா 2025-ஐ அவையில் தாக்கல் செய்தார்.

தொடர்ந்து மக்களவையை அவை நடத்தும் அலுவலர் நடத்த முற்பட்டபோது எதிர்கட்சிகள் பீஹார் விவகாரத்தில் விவாதம் கோரி அமளியில் ஈடுபட்டதால் அவை பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

மாநிலங்களவையிலும் இதே பிரச்சனை எதிரொலித்ததால் அவைத்துணை தலைவர் திரு.ஹரிவன்ஷ் பிற்பகல் 2 மணிவரை அவையை ஒத்திவைத்தார்.

*********

மனோகர் லால்

பொலிவுறு நகர இயக்கத்தின் கீழ் 95 சதவிகித பணிகள் முடிவடைந்திருப்பதாக மத்திய நகர்புற விவகாரங்களுக்கான அமைச்சர் திரு.மனோகர் லால் தெரிவித்தார்.

மக்களவையில் இன்று துணை கேள்விக்கு பதில் அளித்த அவர், பொலிவுறு நகர கட்டமைப்பின் கீழ் ஒன்றரை லட்சம் கோடி ரூபாய் பெறுமான 336 திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

100 நகரங்களின் தரத்தை உயர்த்தி, சீர்மிகு நகரங்களாக மேம்படுத்தும் இந்த திட்டத்தின் கீழ் இந்நகரங்கள் அனைத்தும் நவீன வசதிகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டிருப்பதாக கூறினார்.

இந்த இயக்கத்திற்கான மொத்த ஒதுக்கீட்டை காட்டிலும், 99 சதவிகித நிதி கூடுதலாக ஒதுக்கப்பட்டதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

*********

அன்பூர்ணா தேவி

மகளிர் தலைமைத்துவம் என்பது வளர்ச்சி அடைந்த பாரதத்தில் பெண்கள் தலைமையிலான மேம்பாட்டை உறுதி செய்வதாகும் என்று மத்திய மகளிர் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி தெரிவித்தார்.

ஐ.நா.வின் மகளிருக்கான திறன் கட்டமைப்பு கருத்தரங்கை இன்று புதுதில்லியில் துவக்கிவைத்து பேசிய அமைச்சர், She Leads போன்ற இயக்கங்கள், மகளிரின் திறன்களை மேம்படுத்தி, தேவையான இணையதள பயிற்சிகளுடன், நாட்டின் வளர்ச்சிப்பாதையில் அவர்களை முன்னிறுத்த வகை செய்யும் என்றார்.

இந்த இரண்டு நாள் கருத்தரங்கில் பெண்களை முன்னிலைப்படுத்தி மேம்பாட்டிற்கான நிலைப்பாடுகள் குறித்து விவாதிக்கப்படுகின்றன.

*********

தேசிய கொடி

மூவர்ண தேசிய கொடி குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மத்திய இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சகம் சார்பில் தேசிய அளவிலான இணையதள வினாடி வினா போட்டிகளில் மக்கள் பங்கேற்க மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.

mybharath இணையதளம் மூலமான இந்த ஆன்லைன் வினாடி வினா போட்டியில் பங்கேற்கும் அனைவருக்கும் மின்னணு சான்றிதழ் வழங்கப்படுகிறது.

தேசப்பற்றையும், மூவர்ண தேசிய கொடியை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான இப்போட்டியில் முதல் இடம்பெறும் 25 இளைஞர்கள், மத்திய இளைஞர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மன்சூக் மாண்டவியாவுடன் இணைந்து சியாச்சின் பகுதியை பார்வையிட வாய்ப்பு வழங்கப்பட உள்ளது.

*********

முதலமைச்சர்

இலங்கை சிறையில் உள்ள 80 தமிழக மீனவர்களையும் 237 மீன்பிடி படகுகளையும் உடனடியாக விடுவிக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள, முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கருக்கு முதலமைச்சர் எழுதிய கடிதத்தில் ராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்த 14 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் நேற்று சிறைபிடிக்கப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

மீனவர்கள் பிரச்சனைக்கு நிரந்தர முடிவு எட்டும் வகையில் தூதரக ரீதியிலான பேச்சுவார்த்தைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் முதலமைச்சர் கேட்டுக்கொண்டார்.

*********

கைத்தறி தினம்

11ஆவது தேசிய கைத்தறி தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளை ஒட்டி புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஜவுளித்துறை அமைச்சர் திரு.கிரிராஜ்சிங், இணை அமைச்சர் பவித்ரா மார்கிரேட்டா உள்ளிட்டோர், சிறப்பாக செயலாற்றிய நெசவாளர்களுக்கு தேசிய கைத்தறி விருதுகளை வழங்கினர்.

இதனிடையே கைத்தறி உற்பத்தியில் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இந்நாளை ஒட்டி திருப்பூர், ஈரோடு, நெல்லை, காஞ்சிபுரம், திண்டுக்கல் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் சிறப்பு கைத்தறி கண்காட்சி தொடங்கப்பட்டது.

ஈரோட்டில் கண்காட்சியை துவக்கிவைத்து மாநில அமைச்சர் திரு.முத்துசாமி பேசுகையில்:

வாய்ஸ்

திருச்சியில் இன்று தொடங்கிய கைத்தறி கண்காட்சியில் நெசர்வாளர்களுக்கு நல திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

இதுகுறித்து திருச்சி கைத்தறி ஆய்வாளர் திரு.ஜி.விக்ரமன் தெரிவிக்கையில்: -

---வாய்ஸ்

*********

ரகுபதி

நாட்டிலேயே தமிழகத்தில் தான் கட்டுமான பொருட்கள் தங்கு தடையின்றி கிடைப்பதாக மாநில இயற்கை வளங்கள் துறை அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி கூறியுள்ளார்.

புதுக்கோட்டையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பொறியியல் பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்புகள் மாநிலத்தில் அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டார்.

*********

மகேஷ்பொய்யாமொழி

திருச்சி அரியமங்கலம் பகுதியில் செயல்பட இருந்த மீன் தீவனம் உற்பத்தி திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக மாநில பள்ளிகல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

திருச்சியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கோழி இறைச்சி கழிவுகள் மூலம் மீன் தீவனம் தயாரிக்கும் இத்திட்டம் மக்களுக்கு அதிக பயன்தரக்கூடிய திட்டம் என்று எடுத்துரைத்தார்.

*********

இருவரி

புதுக்கோட்டை, நாமக்கல் மாவட்டங்களில் பொதுவிநியோக திட்ட குறைதீர் நாள் கூட்டம் நாளை மறுநாள் நடைபெறுகிறது.

பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்றுவதற்கு விண்ணப்பிக்கலாம் என ஆட்சித்தலைவர் திரு.அருண் ராஜ் தெரிவித்துள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தடை செய்யப்பட்ட ஆயிரத்து 30 கிலோ பிளாஸ்டிக் பொருட்களை அதிகாரிகள் பறிமுதல் செய்து அபராதம் விதித்தனர்.

*********

கூடைபந்து

ஜெட்டாவில் நடைபெறும் ஆசிய கோப்பை கூடைபந்து போட்டியின் குரூப் சி பிரிவில் இந்தியா தற்போது சீனாவை எதிர்கொண்டுள்ளது.

*********

உலக விளையாட்டு போட்டிகள்

12ஆவது உலக விளையாட்டு போட்டிகள் சீன செங்குடுவில் இன்று தொடங்குகின்றன.

வில்வித்தை பில்லியார்ட்ஸ், உசூ உள்ளிட்ட 5 பிரிவுகளில் இந்தியாவை சேர்ந்த 17 பேர் கொண்ட குழுவினர் பங்கேற்கின்றனர்.

ஒலிம்பிக்கில் இல்லாத 34 வகை விளையாட்டு போட்டிகள் இதில் இடம்பெற்றுள்ளன.

*********

செஸ்

சென்னையில் கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் போட்டிகள் இன்று தொடங்குகின்றன.

9 சுற்றுகளாக இப்போட்டிகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

*********

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது